**DEPOSITION OF WITNESS**

(ChapterXXIII Code of Criminal Procedure)

**-----------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT,No.I, PERAMBALUR**

**CC.No.390/2022**

**Date : 30.12.2024**

**PW1 செல்வராணி க/பெ. ஜெய்சங்கர்**

**மனுவின் பேரில் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் புகார் கொடுத்த கண்ணன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எந்த உறவும் இல்லை. எதிரி கண்ணன் என்பவர் புதுவேட்டக்குடி கிராமத்தில் கிருஷ்ணா பேர் பார்ட்ஸ் என்ற பெயரில் கடை நடத்தி வருகிறார் என்றால் அந்த கடை என்னுடையது, அதை தற்போது அவர் நடத்திவருகிறார். நான் சொல்வதுபோல் எனக்கு எந்தவிதமான கடையும் இல்லை என்றாலும், எதிரி வேறு இடத்தில் கடை நடத்திவருகிறார் என்றாலும் சரியல்ல. தற்போது எதிரி நடத்தி வரும் கடையின் பெயர் ஓவியா. கிருஷ்ணா பேர் பார்ட்ஸ் கடையை எதிரியும், எனது கணவரும் சேர்ந்து நடத்திவந்தார்கள் என்றால் இல்லை. கிருஷ்ணா பேர் பார்ட்ஸ் கடை யார் பெயரில் உரிமம் உள்ளது என்றால் என்னுடைய பெயரில் உள்ளது.

என் பெயரில் உள்ள உரிமத்தை போலீஸிடம் கொடுத்துள்ளேன். என்னுடைய பெயரில் உரிமம் இல்லை என்றாலும், இருந்திருந்தால் அதை காவல் துறையினர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய முதன்மை வாக்குமூலத்தில் 07.08.2021ம் தேதி கடையை திறப்பதற்காக சென்றபோது கண்ணன் என் கடையில் இருந்தார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 07.08.2021 முதல் 12.07.2022 வரை எதிரியின் மீது எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் மீது எனது கணவர் ஜெய்சங்கர் குன்னம் காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக புகார் கொடுத்து குற்ற எண் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

புதுவேட்டக்குடியில் உள்ள கிருஷ்ணா பேர் பார்ட்ஸ் கடைக்கு எதிரியும், எனது கணவர்தான் கூட்டுதொழில் செய்து கடையை விரிவுபடுத்தவேண்டி முதலீடு தேவைபட்டதில் எதிரி மட்டும் தனித்து வேறு நபரிடம் கடன் பெற்று ரூ.1,50,000/- முதலீடு செய்தார் என்றால் சரியல்ல. எதிரி மேற்படி கடனை திரும்ப செலுத்தவேண்டி கூட்டுபங்குதாரரான எனது கணவரிடம் பாதி தொகையை கேட்டதற்கு பொய்யான புகார் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. கடை நடைபெற்ற இடத்தை சுற்றியுள்ள அனைத்து நபர்களும் எதிரியும் எனது கணவரும் கூட்டாக நடத்திவருகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும் என்றாலும், மேற்படி கடன் தொகையை திரும்பி கேட்பதால் எனது கடை என்று தனித்து உரிமை கோருகிறார் என்றால் சரியல்ல.

நான் விவசாயம்தான் செய்துவருகிறேன் என்றாலும், கிருஷ்ணா பேர் பார்ட்ஸ் கடையில் உள்ள பொருட்கள் பெயர்கள் எதிரிக்குத்தான் தெரியும் என்றாலும், எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. நான் நடத்திவருவதாக கூறும் கடையில் வாங்கும் பொருட்களுக்கான வரவு, செலவு வங்கி கணக்குகள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் கணவருக்குத்தான் தெரியும். எனக்கும், எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் எந்தவிதமான வரவு, செலவு வட்டி கணக்குகள் கிடையாது என்றாலும், கிருஷ்ணா பேர் பார்ட்ஸ் கடையின் விரிவாக்கத்திற்காக தனிப்பட்ட முறையில் எதிரி கடன் வாங்கி கொடுத்த கடனை ஏமாற்றும் நோக்கில் எதிரியின் மீது பொய் புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிக்கும், எதிரி என்னிடம் வட்டி வாங்கியதாக கூறியுள்ள புகாருக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரி பணம் பெற்றதாகவும் வட்டி பெற்றதாகவும் கூறப்படும் தொகைக்கு எந்தவிதமான ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியும் எனது கணவரும் கூட்டுபங்குதாரர் என்றாலும், தன்னுடைய பங்கு தைொகையை கடை விரிவாக்கத்திற்கு கொடுக்காமல் ஏமாற்ற வேண்டும் என்பதற்காக

பொய்யாக புகாரை என் கணவர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. போலீஸார் என்னை விசாரித்தார்கள். எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று ஞாபகமில்லை. புகார் கொடுத்தபோதும் விசாரித்தார்கள். அதன் பிறகும் விசாரித்தார்கள். புகாரில் கூறியுள்ளவாறு எதிரி ஆபாச வார்த்தைகள் எதுவும் பயன்படுத்தவில்லை என்றாலும், அப்படி புகாரில் எழுதப்பட்டால்தான் குற்ற எண் வழங்குவார்கள் என்று காலதாமதமாக புகாரை கொடுத்தேன் என்றால் சரியல்ல.

உண்மையிலேயே என்னுடைய கடை என்றால் சம்பவம்நடந்த மறுநாளே புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், அவ்வாறு இல்லாததால்தான் 1வருடம் காலதாமதமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியை ஏமாற்றி பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over / interpreted to the witness in the presence of the accused / accused/ pleader and admitted by the witness to be correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.